## இயல் 7.4 - நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

பயிற்சி எண் :: 7.4.2.3.E

நேர் எதிர் விகிதங்கள் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 4.3.10-11

## நேர் எதிர் விகிதங்கள் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 4.3.10-11

10) 105 நோட்டுப் புத்தகங்களின் விலை ₹2,415. ₹1,863 -க்கு எத்தனை நோட்டுப் புத்தகங்கள் வாங்கலாம்?

₹1,863 -க்கு $x$ நோட்டுப் புத்தகங்கள் வாங்கலாம் எனக்கொள்க.

| | | |
|---|---|---|
| நோட்டுப் புத்தகங்களின் எண்ணிக்கை | 105 | $x$ |
| நோட்டுப் புத்தகங்களின் விலை (₹) | 2415 | 1863 |

நோட்டுப் புத்தகங்களின் விலை குறையும்போது, நோட்டுப் புத்தகங்களின் எண்ணிக்கையும் குறையும். எனவே, இவை **நேர் விகிதத்தில்** அமைந்துள்ளன.

$$\implies \frac{x_1}{y_1} = \frac{x_2}{y_2}$$

$$\frac{105}{2415} = \frac{x}{1863}$$

குறுக்குப்பெருக்கல் செய்க.

$$105 \times 1863 = x \times 2415$$

$$x \times 2415 = 105 \times 1863$$

$$x = \frac{105 \times 1863}{2415} = \frac{\overset{7}{\cancel{105}} \times 1863}{\underset{161}{\cancel{2415}}} = \frac{7 \times 1863}{161}$$

(∵ 15 -ஆல் வகுக்க.)

$$= \frac{\overset{1}{\cancel{7}} \times 1863}{\underset{23}{\cancel{161}}} = \frac{1863}{23} = \boxed{81}$$

$$\begin{array}{r} 81 \\ 23\,\overline{)\,1863} \\ 184 \\ \hline 23 \\ 23 \\ \hline 0 \end{array}$$

₹1,863 -க்கு **81** நோட்டுப் புத்தகங்கள் வாங்கலாம்.

11) 10 விவசாயிகள் 21 நாட்களில் நிலத்தை உழுது முடிக்கின்றனர் எனில், அதே நிலத்தை 14 விவசாயிகள் எத்தனை நாட்களில் உழுது முடிப்பர்?

நிலத்தை 14 விவசாயிகள் $x$ நாட்களில் உழுது முடிப்பர் எனக்கொள்க.

| | | |
|---|---|---|
| விவசாயிகளின் எண்ணிக்கை | 10 | 14 |
| நாட்களின் எண்ணிக்கை | 21 | $x$ |

விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, நிலத்தை உழுது முடிக்க எடுத்துக்கொள்ளும் நாட்களின் எண்ணிக்கை குறைகிறது. எனவே, இவை **எதிர் விகிதத்தில்** அமைந்துள்ளன.

$$\implies x_1 \times y_1 = x_2 \times y_2$$

$$10 \times 21 = 14 \times x$$

$$14 \times x = 10 \times 21$$

$$x = \frac{10 \times 21}{14} = \frac{10 \times \overset{3}{\cancel{21}}}{\underset{2}{\cancel{14}}}$$

(∵ 7-ஆல் வகுக்க.)

$$= \frac{10 \times 3}{2} = \frac{\overset{5}{\cancel{10}} \times 3}{\underset{1}{\cancel{2}}} = 5 \times 3 = \boxed{15 \text{ நாட்கள்}}$$

அதே நிலத்தை 14 விவசாயிகள் **15** நாட்களில் உழுது முடிப்பர்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 13:30 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.